# கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

## முழுமையாக அரசாங்கத்திற்கு உடமையான கம்பனி

# ஆண்டறிக்கை

## 2016/2017


**தலைமை அலுவலகம்**
561/3,
எல்விட்டிகல மாவத்தை,
நாராஹென்பிட்டிய,
கொழும்பு - 05

**சுரங்கம்**
கஹடகஹ சுரங்கம்
மதுராகொட
தொடங்கஸ்லந்த

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | 011- 2368738 |
| தொலைநகல் | : | 011- 2058062 |
| மின்னஞ்சல் | : | kgll@sltnet.lk |
| இணையத்தளம் | : | www.kgraphite.lk |

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | 0372252015 |
| தொலைநகல் | : | 0374931711 |

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 01 |
| தலைவரின் கண்ணோட்டம் | 02 |
| கணக்காய்வுக் குழு அறிக்கை | 04 |
| கூட்டு நிறுவனத் தொலைநோக்கு, பணி மற்றும் குறிக்கோள்கள் | 05 |
| நிறுவனக் கட்டமைப்பு | 06 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 07 |
| நிதிசார் வெளிப்பாடுகள் | 09 |
| வருடாந்தக் கணக்குகள் | 10 |
| கூட்டம் பற்றிய அறிவித்தல் | 11 |
| பதிலாள் படிவம் | 12 |

# அறிமுகம்

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

கஹடகஹ சுரங்கம் இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் மதுரகொட, **தொடங்கஸ்லந்தவில்** கொழும்பு பிரதான நகரத்தில் இருந்து சுமார் 90 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதுடன் **கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்டினால்** (கேஜீஎல்எல்) முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. இது முழுவதுமாக அரசாங்கத்தின் உடமையான மக்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி என்பதுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு கைத்தொழில், வாணிப அமைச்சின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். கம்பனியின் பிரதான பங்குதாரர் **பொதுத் திறைசேரியின் செயலாளர்** ஆவார். கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்டின் பிரதான கொள்கை ஆக்க அமைப்பு, நிறைவேற்றுத் தலைவரால் தலைமை வகிக்கப்படும் பணிப்பாளர்கள் சபையாவதுடன் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் அதன் நேர் வரிசை அமைச்சு மற்றும் பொறுப்புத் திறைசேரியிடம் இருந்து அதன் கூட்டு நிறுவனக் கொள்கையின் சாராம்சத்தைப் பெறுகின்றது.

கஹடகஹ சுரங்கம், ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவில், தொடங்கஸ்லந்த, மதுரகொடவில் மலைசார்ந்த பிரதேசத்தில் 25 மீற்றர்கள் உயரத்தில் அமைந்துள்ளதுடன் காணியின் விஸ்தீரணம் ஏறத்தாழ 102 ஏக்கர்களாகும். 102 ஏக்கர் காணியின் மேற்பரப்பில் 76 ஏக்கர்களில் தென்னைப் பயிர்ச்செய்கை கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்டினால் கையாளப்படுகின்றது.

இலங்கையில் போகல சுரங்கம் மற்றும் கஹட்டகஹ சுரங்கம் ஆகிய பிரபல்யமான இரு பிரதான சுரங்கங்கள் உள்ளன. கஹட்டகஹ சுரங்கம் இரு சுரங்களின் ஒன்றிணைப்பாகும். கஹடகஹ மற்றும் கொலங்கஹ சுரங்கங்கள் என 1872 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பட்டு 1973 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டதை அடுத்து இரு சுரங்கங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே சுரங்கமாக செயற்பட்டுவருகின்றது.

சுரங்கம் 2000 அடி 610 (மீற்றர்) ஆழமாக இருப்பதுடன் இதுவே இலங்கையில் உள்ள ஆழமான சுரங்கமாகும். சுரங்கத்தை அடைவதற்கு 2 துளைகொண்ட வழிகள் உள்ளன. கஹடகஹவில் உள்ள துளையின் ஆழம் 1132 அடி (345மீற்றர்) அளவிலும் கொலோன்கஹ 330 அடிவரை (101 மீற்றர்) ஆழமானதாகும். துளைகள் இரு வேறு பகுதிகளினால் சுரங்கத்தை அடைகின்றன. துளையின் அடிவாரத்தில் கீழ் மட்டத்தில் 2000 அடி (610 மீற்றர்கள்) மட்டத்தை அடையும் வரை இழுவைப் பொறிமுறைகள் உள்ளன. பிரதான துளையும், இழுவைப் பொறிமுறையும் சுரங்கத்தின் பல்வேறு மட்டங்களிற்கு நிலக்கீழ் தொழிலாளர்களை 1132 அடி முதல் 2000 அடி மட்டம் வரை ஒன்று திரட்டுவதற்காகவும் சுரங்க அகழ்வுகளை வெளியே கொண்டு வருவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. சுரங்கத்தில் 500 மீற்றர்கள் வரையான ஆழம் வரையே அதன் அகலமான பகுதியாகும்.

### கஹடகஹ உற்பத்தியின் தனித்துவம்

உயர்ந்த இரக இயற்கைத் திரள் வகைப் பளிங்குருக் காரீயத்திற்கென வணிகரீதியான ஒரேயொரு வழங்குனர் இலங்கையாகும். குறிப்பாக கஹட்டகஹ காரீய சுரங்கத்தில் இருந்து 99% மேற்பட்ட காபனைக் கொண்ட அதி தூய இயற்கைத் திரள்வகைக் காரீயம் பூரண பளிங்குரு வடிவில் அகழ்ந்தெடுக்கப்பட்டுவருகின்றது. இவை திரள், ஊசியுரு, நுண்தகட்டு வகை மற்றும் கீற்று வடிவில் அமைந்துள்ளது. இயற்கைப் பளிங்குருத் திரள்வபைக் காரீயச் சந்தையின் ஏகபோக உரிமையைப் பெற்ற இழிவளவு மாசுக்களை உடைய உயர் சதவீத காபனைக் கொண்ட பளிங்குருத் திரள்வகைக் கஹடகஹ காரீயம் உலக சந்தையில் தனித்துவம் மிக்க உற்பத்திப் பொருளாக அங்கீகாரம் பெற்று அதன் நற்பெயர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# தலைவரின் கண்ணோட்டம்

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் இன் தலைவர் என்ற வகையில் 2016/2017 ஆண்டு கணக்குகள் பற்றிய எனது ஆய்வைத் தெரிவித்துக்கொள்கின்றேன. நிறுவனத்தின் செயல் திறன் அடிப்படையில் நோக்குகின்ற போது இவ்வாண்டின் ஆய்வு கணிசமாக காணப்படுகின்றது.

## உற்பத்தி

2016/2017 ஆண்டின் போது சுரங்கத்தில் 811 மெ.தொ. காரீயத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டின் 771 மெ.தொன்களிற்கு எதிராக 5.1 சதவீத அதிகரிப்பாகும்.

கம்பனி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் உற்பத்தி அடிப்படையிலான கொடுப்பனவுத் திட்டங்களை அமுல்படுத்தியது. இதன் மூலம் பணியாளர்கள் அதிக இலக்குகளை அடையும் வகையில் உறுதியான உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபடலாம்.

## விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் நிதி நிலைமை

ஆண்டின் போது பதப்படுத்திய 530 மெ.தொ. காரீயம் ரூபா 112 மில்லியனிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனால் முன்னைய ஆண்டின் வருமானத் தொகையான 122.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 3.4 மில்லியன் தொகையில் எமது வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஜப்பான் மற்றும் ஐக்கிய இராச்சிய சந்தையில் இருந்து உயர் தரத்திலான பதனிடப்பட்ட காரீயத்திற்கு குறிப்பாக 97/99% சீ இற்கும் 90/92 % சீ இற்கும் குறைந்த கட்டளைகள் பெறப்பட்டமையே வருமானம் குறைந்தமைக்கு காரணமாகும். ஜப்பானிற்கான ஏற்றுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 50% இற்கு மேல் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. காரீயம் முக்கிய சந்தையைக் கொண்டிருப்பதே வழமையாகும்.

## நிதி நிலைமை

வழமையாக, பெரும்பாலான எமது கிரயக் கூறுகள் இயற்கையாகவே நிர்ணயிக்கப்பட்டவையானதுடன் வருமானக் குறைவுடன் முகாமைத்துவம் அதன் செலவினத்தைக் குறைப்பதற்கு அதி உயர் முயற்சியை எடுக்கின்றது. நாட்டின் நிலையற்ற அரசியல் நிலையைத் தொடர்ந்து ஊழியம் மற்றும் பொருள் கிரய அதிகரிப்பின் கீழும் பாரியளவில் நிதி நிர்ணயிக்கப்பட்டு முன்னைய ஆண்டிற்கான ரூபா 10.8 மில்லியன் இழப்பைக் கருத்திற்கொள்ளாது இறுதியாக ரூபா 2.39 மில்லியன் தொகையாக வரிக்கு முன்னைய இலாபத்தைக் கொண்டிருந்தது.

## நிலத்தடி சுரங்க அபிவிருத்திகள்

எவ்வாறெனினும், குறைந்த நிதியின் கீழும் நாம் செயற்படுகின்றோம். நிலத்தடி அபிவிருத்தி வேலைகளுக்காக தேவையான பொறி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. எவ்வாறெனினும், முகாமைத்துவம், தமது மூலோபாயத்தையும் மூலோபாய இயலுமைகளையும் கிடைக்கப்பெற்ற காசுப்பாய்ச்சலுக்கு இணங்கும் வகையில் மாற்றியதுடன் இதன் படி, எந்தவித அவசர மூலதனச் செலவினங்களும் பிற்போடப்படவில்லை.

## புனரமைத்தல்

சில கட்டிடங்கள் பாழடைந்த நிலையிலும் மற்றும் சில கட்டிடங்கள் சேதங்களின் காரணமாக நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் இருந்தன. முக்கியமாக தலைவரின் பங்களா கீப்பர் இல்லம் முற்றிலுமாக பாழடைந்த நிலையிலிருந்தது. மறுஆய்வு செய்யப்பட்ட ஆண்டில் இவ் இல்லம் புனரமைப்புச் செய்யப்பட்டதுடன்இ நீண்ட காலமாக சேதமடைந்த நிலையிலிருந்த தலைவர் பங்களாவின் பாதுகாப்புச் சுவர் முற்றிலும் புனரமைக்கப்பட்டது.

## தெங்குப் பயிர்ச்செய்கையும் பெருந்தோட்ட அபிவிருத்தியும்

நாம் ஏற்கனவே 52 ஏக்கர் தென்னம் பயிர்ச்செய்கை மீள்நடுகையில் ஈடுபட்டுள்ளோம். தென்னந் தோட்டம் மிகச் சிறந்த அளவில் முகாமைத்துவம் செய்யப்பட்டு வருவதுடன் தோட்டத்தைப் பராமரிப்பதற்காக 8 ஊழியர்களை தொடர்ந்து வழங்கியுள்ளதுடன் உள் தோட்டப் பயிரினத் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளும் உரங்கள் முதலியவையும் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் இவ் ஆண்டின் போது 1,200 மிளகுக் கன்றுகள் ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபையின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுவருகின்றன.

எவ்வாறெனினும், சுரங்க நிலப்பரப்பின் 102 ஏக்கர்களில் 50 ஏக்கர்கள் குறித்த காணியை இரு தரப்பினரில் ஒருவருக்கேனும் பயன்படுத்துவதற்கு நீதிமன்ற வழக்கில் கட்டளையிடப்படாமையால் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளதுடன் இதன் விளைவாக காடாக மாறி கிராமத்தவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், முன்னாள் ஊழியர்கள் சிலர் ஊழியர் விடுதிகளில் பலவந்தமாக குடியிருக்கின்றனர். கம்பனிக்கு எந்தவித நலனும் இன்றி யொவுன் சேனாங்க மற்றும் சமுர்த்தி வங்கியால் 9 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் கம்பனிக்கு உரிய காணியின் சில பகுதிகளில் பலவந்தமாகக் குடியிருக்கப்படுவதுடன் அதிகாரமற்ற முறையில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு சட்டவிரோதமான முறையில் குடியிருக்கப்படுகின்றது.

## தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் பிரச்சனைகள்

வளங்களின் வினைத்திறன் மற்றும் பயனுறுதித் தன்மையை முன்னேற்றும் வகையில் முகாமைத்துவத்தின் மேலாண்மைத்துவ அணுகுமுறையின் மூலம் ஊழியர்களுடனான உறவுமுறை பேணப்பட்டது. நிலத்தடி தொழிலாளர்களின் நடத்தை அவர்களது வேலையின் சுற்றுச் சூழல் மற்றும் ஆபத்தான தன்மை காரணமாக வெளித்தள தொழிலாளர்களினதில் இருந்தும் வேறுபட்டதாகும்.

பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் பாதுகாப்புச் சீருடைகள் உரிய நேரத்தில் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஊழியர்களைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் உயர்த்தி முறைமைகள் உள்ளடங்கலாக நிலத்தடி உபகரணங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுள்ளன. ரிதீகம வைத்தியசாலையில் இருந்து அரசாங்க வைத்தியர் ஒருவர் சுரங்க வளாகத்திற்கு ஒரு வாரத்திற்கு ஒரு முறை வருகை தந்து தொழிலாளர்களினதும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உள்ளடங்கலாக சுகாதார நிலையைப் பரிசோதித்து வருகின்றார். குருணாகல் தள வைத்தியசாலையின் ஒத்துழைப்புடன் வருடாந்த மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. எமது மருத்துவ நிலையம் சிறந்த அனுபவம் வாய்ந்த ஆண் தாதி உட்பட சகல அடிப்படை உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியமான அவசர மருந்துகளுடன் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

மீளாய்வாண்டின் போது கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட்டினால் ஈட்டப்பட்ட எந்தவித வெற்றியும் இந் நிறுவகத்தின் சகல ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடமை உணர்ச்சி இல்லாது சாத்தியமானதல்ல. குறிப்பாக நிலத்தடி தொழிலாளர்கள். நிலத்தடி தொழிலாளர்களின் இத்தகைய பங்களிப்பு இவர்கள் எந்த வேளையிலும் ஆபத்திற்கு உள்ளாகும் நிலையில் உள்ளமையால் எப்போதும் நினைவுகூரப்பட வேண்டியதுடன் மெச்சப்பட வேண்டியதாகும்.

மீளாய்வாண்டின் போது கூட்டுப் பணிப்பாளர்களும் கம்பனியின் நலனுக்காக தமது மட்டற்ற ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளனர்.

இந் நிலையை எனக்கு வழங்கிய கௌரவ கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சருக்கும், கௌரவ கைத்தொழில் மற்றும் வணிக இராஜாங்க அமைச்சர், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் செயலாளர் மற்றும் கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட்டிற்கும் தமது ஒத்துழைப்பை வழங்கிய திறைசேரிச் செயலாளர் மற்றும் பதவியணியினருக்கும் குறிப்பாக பணிப்பாளர் சபைக்கும் கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட்டின் சகல உத்தியோகத்தர்களுக்கும் நான் நன்றி கூறாவிடில் எனது கடமைகளிலிருந்து தவறியவனாவேன். இறுதியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கும் இரணவீர அன்ட் நாகசிங்ஹ அன்ட் கம்பனி பட்டயக் கணக்காளர்களுக்கும் அவர்களது ஊழியர்களுக்கும் கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட்டின் கணக்காய்வாளர்களாக எவ்வித தயக்கமும் இல்லாது இவ்வாண்டிலும் தமது திருப்திகரமான சேவையை வழங்கியமைக்காக எமது நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அல். ஹாஜ். எம். அப்துல் மஜீட்
தலைவர்
**கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்**
30 வது ஜூலை 2018

# கணக்காய்வுக் குழு அறிக்கை

## கணக்காய்வுக் குழுவின் பணி

கணக்காய்வுக் குழுவின் பிரதான குறிக்கோள், நிதி அறிக்கையிடல், இடர் முகாமைத்துவத்தின் ஒருமைப்பாட்டின் மிக உயர் தரங்களை ஊக்குவித்துப் பாதுகாப்பதுடன் நியதிச்சட்டம் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செயற்பட்டு காத்திரமான உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பேணுவதாகும்.

## கணக்காய்வுக் குழுவின் அமைப்பு

கணக்காய்வுக் குழு மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியதாகும். இவர்களில் ஒருவர் கம்பனியின் ஒரே பங்குதாரரான திறைசேரியால் முன்மொழியப்படுபவரின் தலைமையின் கீழும் சபையின் செயலாளரை அழைப்பாளராகக் கொண்டதாகவும் அமையப்பெற்றுள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் குழுவின் அமைப்பு பின்வருமாறானதாகும்:

| | | |
|---|---|---|
| திருமதி. என் பீ ஏ ஆர் ஜயவர்தன | – | தலைவர் |
| திரு. ஐ.எம். ஜுனைஸ் | – | பணிப்பாளர் |
| திரு. பீ.எஸ். விமலசுந்தர | – | பணிப்பாளர் |

## கூட்டங்களும் அமர்வுகளும்

குழுக் கூட்டங்கள் காலாண்டிற்கு ஒரு முறை நடாத்தப்படுவதுடன் நான்கு கூட்டங்கள் 2016 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது நடாத்தப்பட்டிருந்தது. கம்பனியின் முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சால் நியமிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளரும் கணக்காளரும் தேவை ஏற்படும் போது கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்படுகின்றனர்.

## செயற்பாடுகள்

கணக்காய்வுக் குழு, வரைவுக் கணக்குகள், வெளிவாரிக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தும் கலந்தாலோசித்தும் தனது கடமைகளை நிறைவேற்றியது. கணக்காய்வுக் குழு இவ் அறிக்கைகளை மீளாய்வு செய்து தற்போதைய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதன் மூலம் கம்பனி எதிர்நோக்கும் மோசடி, தவறுகள், செயற்பாட்டு, நிதிசார் இடர்கள் நிகழ்வதற்கான சாத்தியப்பாட்டையும் அதனாலான விளைவுகளையும் இழிவளவாக்குவதற்காக செயற்படுத்தக்கூடிய மேலதிகக் கட்டுப்பாடுகளையும் இடர் நீக்கல் மூலோபாயங்களையும் பரிந்துரைத்துள்ளது. ஒவ்வொரு கூட்டத்தின் போதும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் உள்ள விடயங்கள் குறித்து ஆழமாக கலந்தாலோசித்து வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரச்சனைகளைத் தீர்க்கும் பொருட்டு முகாமைத்துவத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலதிக கலந்துரையாடல்களை அடுத்து தீர்மானங்களை எடுப்பதற்காக சில விடயங்கள் பணிப்பாளர் சபைக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

வெளிவாரி கணக்காய்வாளர் 2016/2017 ஆம் ஆண்டிற்காக உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியுள்ளமையையும் அவதானித்தது.

குழுவின் சார்பாக

கணக்காய்வுக்குழுத் தலைவர்

## கூட்டு நிறுவனத் தொலைநோக்கு

"உலகில் இயற்கையான பளிங்குருத் திரள் வகைக் காரீயத்தின் தனித்துவமான மூலமாக விளங்குதல்"

## கூட்டு நிறுவனப் பணி

"நாட்டில் காரீயக் கனிப்பொருள் மூலங்களில் உச்சப் பயன்பாட்டுடன் அன்னிய செலாவணியைச் சம்பாதிப்பதன் மூலம் இலங்கைப் பொருளாதார, சமூக அபிவிருத்தியில் பயனுறுதிவாய்ந்த, வினைத்திறனான செயலாக்கமுள்ள ஓர் பங்குதாரராக இருத்தல்"

## கூட்டு நிறுவனக் குறிக்கோள்கள்

"உயர்தரமான தூய்மையான காரீயத்தை ஏற்றுமதி செய்வதற்காக அகழ்தல், பதப்படுத்தல், மற்றும் உயர்ந்த பட்ச பெறுமதியைச் சேர்த்தலும், காரீய அடிப்படையிலான கைத்தொழில்களை விருத்தி செய்தலுமே கம்பனியின் குறிக்கோள்களாகும்."

## நிறுவனக் கட்டமைப்பு

கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட், நிறைவேற்றுத் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை ஒன்றின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் தொழிற்பாடானது பின்வரும் விடயப் பரப்புகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

- ✓ அகழ்தல்
- ✓ பதப்படுத்துதல்
- ✓ பொறிமுறைசார் மற்றும் மின்பொறியியல்
- ✓ சந்தைப்படுத்தல்
- ✓ தனியாள்
- ✓ நிருவாகம்
- ✓ நிதி மற்றும் கணக்கீடு
- ✓ விநியோகங்கள் மற்றும் களஞ்சியங்கள்
- ✓ பொது சிவில் பொறியியல்
- ✓ பாதுகாப்பு

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

## 2017 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

2017 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை பணிப்பாளர்கள் இத்தால் சமர்ப்பிக்கின்றனர். இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக, அதில் தெரிவிக்கப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதும், சமர்ப்பிப்பதும் பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும்.

இயக்குனர்களினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர்களின் அறிக்கை என்பன ஜூலை 13இ 2007 இல் அங்கீகரிக்கப்பட்டது.

**பிரதான செயற்பாடுகள்**

கம்பனியின் பிரதான செயற்பாடுகள் :

1. 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலால் உருவாக்கப்பட்ட அரச அகழ்வு, கனிப்பொருள், அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கொலொன்கஹ, கஹட்டகஹவில் குறித்தொதுக்கப்பட்ட வணிக அலுவல்களை வெற்றிகரமான முறையில் கொண்டுநடாத்தல்.

2. கூறப்பட்ட அரச அகழ்வு, கனிப்பொருள், அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கொலொன்கஹ, கஹட்டகஹ எனக் குறித்தொதுக்கப்பட்ட பகுதியால் உடமையாக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட அசையும், அசையாச் சொத்துக்களின் சொத்துடமைக்கு பின்னுரிமையாளராகுதல்.

**செயல்பாடுகள் மற்றும் நிதி முக்கியத்துவம் பற்றிய ஆய்வுகள்**
இலாபம், நட்டம், மொத்த வருமானம்,நிதி நிலைமை அறிக்கை, சமத்துவம் மற்றும் 31.03.2017 வரையிலான கம்பனியின் நிதி நிலைமை அறிக்கை என்பன ஆண்டு அறிக்கையின் 3 முதல் 24ம் பக்கங்கள் வரையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் மற்றும் கணக்காய்வாளர்களின் நிதி அறிக்கைகள்**
பணிப்பாளர்கள் நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கு பொறுப்பானவர்கள். இவர்கள் கம்பனி விவகாரங்களில் உண்மையான மற்றும் நியாயமான முறையில் நடந்து கொள்கின்றனர். அத்துடன் இந்த நிதி அறிக்கைகள் 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் இல7, இலங்கை கணக்கியல் மற்றும் தணிக்கை தரச்சட்ட சட்டம் மற்றும் கொழும்பு பங்குச்சந்தையின் தொடர்ச்சியான விதிகள் ஆகியவற்றின் தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

**கணக்கியல் கொள்கைகள்**

நிதி அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் அதன் தாக்கங்கள், கம்பனியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் விவரங்கள் ,இலங்கை கணக்கியல் தரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்பன ஆண்டறிக்கை 8 இல் தரப்பட்டுள்ளன.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

ஒவ்வொரு ஆண்டினதும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றில் ஏற்பட்ட அசைவுகள் நிதிக்கூற்றின் குறிப்பு 20 இல் தரப்படுகின்றது.

**முதலீடுகள்**

கம்பனியினால் பணிக்கொடை கடமைகளை நிறைவேற்றுவதற்காக NSB சேமிப்பு கணக்கில் ரூபா 2,932,674.31 முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**அன்பளிப்பு**

கணக்கீட்டுக் காலப்பகுதியின் போது கம்பனி அன்பளிப்புகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**கணக்காய்வு அறிக்கை**

நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர்களின் அறிக்கை ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்களின் இளைப்பாறல்**

அமைப்பு அகவிதிகளுக்கு அமைவாக **திரு. மொஹமட் சரீப் லியாகுவாத் அலிக்கான்** அவர்கள் சுழற்சி முறைப்படி இளைப்பாறுகிறார் என்பதுடன் தொடர்ந்து பணியிலுள்ள பணிப்பாளர்களின் ஏகமனதான ஆதரவுடன் அவர்கள் மீள் தெரிவிற்குத் தகமைபெற்றுள்ளார்.

அமைப்பு அகவிதிகளுக்கு அமைவாக **திரு. பாலசூரிய முதியன்சலாகே நந்த விபுல பண்டார பாலசூரிய** அவர்கள் சுழற்சி முறைப்படி இளைப்பாறுகிறார் என்பதுடன் தொடர்ந்து பணியிலுள்ள பணிப்பாளர்களின் ஏகமனதான ஆதரவுடன் அவர்கள் மீள் தெரிவிற்குத் தகமைபெற்றுள்ளார்.

அமைப்பு அகவிதிகளுக்கு அமைவாக **திரு. உதுமான்கந்து மொஹமட் நிஸார்** அவர்கள் சுழற்சி முறைப்படி இளைப்பாறுகிறார் என்பதுடன் தொடர்ந் து பணியிலுள்ள பணிப்பாளர்களின் ஏகமனதான ஆதரவுடன் அவர்கள் மீள் தெரிவிற்குத் தகமைபெற்றுள்ளார்.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 210 ஆம் 211 ஆம் பிரிவின் படி, **திரு. அல்ஹாஜ் மீராஸாஹிபு அப்துல் மஜீட்** 70 வயதை அடைந்தமையால் ஓய்வுபெற்று தொடர்ந்து பணியிலுள்ள பணிப்பாளர்களின் ஏகமனதான ஆதரவுடன் அவர்கள் மீள் தெரிவிற்குத் தகமைபெற்றுள்ளார்.

**2017 மார்ச் 31 இல் உள்ளவாறான பணிப்பாளர்கள்**
2017 மார்ச் 31 இல் உள்ளவாறு பணியாற்றிய பணிப்பாளர்களின் பெயர்கள் பின்வருமாறாகும்.

## முழுப் பெயர்

திரு. அல்ஹாஜ் மீராஸாஹிபு அப்துல் மஜீட்

திரு. இஸ்மாயில் மொஹமட் ஜுனைஸ்

திரு. மொஹமட் சரீப் லியாகுவாத் அலிக்கான்

திருமதி. நைனாநாயக பதிரணஹேலாகே அனுஜா ரோஷனி ஜயவர்தன

திரு. பந்துல சேனாதி விமலசுந்தர

திரு. உதுமான்கந்து மொஹமட் நிஸார்

திரு. பாலசூரிய முதியன்சலாகே நந்த விபுல பண்டார பாலசூரிய

**பணிப்பாளர்கள் சபை பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றன**

(1) கம்பனி சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு எதிரான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.
(2) கம்பனி சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களில் உள்ள அனைத்து பொருட்களின் நலன்கள் மற்றும் அவை ஆர்வமாக இருந்த விடயங்களில் வாக்களிப்பதில் இருந்து விலகி நிற்கின்றன.
(3) கம்பனி பங்குதாரர்களின் சமபங்கை உறுதி செய்வதற்காக அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.
(4) வியாபாரம் என்பது ஒரு தேவைப்பாடு ஆகும். அவசியமான அனுமானங்கள், தகுதிகளை ஆதரிப்பதோடு நிதி,இணக்க கட்டுப்பாடுகள்,மற்றும் இடர் மேலாண்மை ஆகியவற்றை உள்ளடக்கிய மதிப்பாய்வுகளை அவர்கள் மேற்கொண்டிருப்பதோடு அவர்களது செயல்திறன் வெற்றிகரமாக பின்பற்றுவதற்கு நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுள்ளனர்.

### பணிப்பாளர்களின் ஊதியம்

மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் மொத்த ஊதியத் தொகை நிதிக்கூற்றின் குறிப்பு 13 இல் தரப்பட்டுள்ளது.

### கம்பனியின் ஒப்பந்தங்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை

கம்பனியின் ஒப்பந்தங்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**பணிப்பாளர்கள் கூட்டங்கள்**

**பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

| இயக்குனரின் பெயர் | சமூகமலித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. அல்ஹாஜ் மீராஸாஹிபு அப்துல் மஜீட் | 8/8 |
| திரு. மொஹமட் சரீப் லியாகுவாத் அலிக்கான் | 7/8 |
| திருமதி. என் பீ ஏ ஆர் ஜயவர்தன | 8/8 |
| திரு. இஸ்மாயில் மொஹமட் ஜுனைஸ் | 6/8 |
| திரு. பீ.எஸ். விமலசுந்தர | 8/8 |
| திரு. பாலசூரிய முதியன்சலாகே நந்த விபுல பண்டார பாலசூரிய | 6/6 |
| திரு. உதுமான்கந்து மொஹமட் நிஸார் | 5/6 |

## நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்களின் அறிவு மற்றும் நம்பிக்கைக்கு அமைவாக அரசாங்கத்திற்கும் பணிப்பாளர்களுக்கும் தொடர்புபட்ட அனைத்து நியதிச் சட்டக்கொடுப்பனவுகளும் உரிய திகதியில் செலுத்தப்பட்டு அல்லது கம்பனியின் புத்தகங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதில் அவர்கள் திருப்திகரமாக உள்ளனர்.

**பொறுப்புக்கள் மற்றும் மூலதனப் பொறுப்புடைமை**

மூலதன செலவினங்கள் குறித்த பொறுப்புக்கள் மற்றும் மூலதனப் பொறுப்புடைமையின் மார்ச் 31,2017வரையிலான விடயங்கள் நிதி அறிக்கை 8ல் இல் தரப்பட்டுள்ளன.

## ஐந்தொகைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள் பொருண்மைத்துவம் கவனத்தில் எடுக்கப்பட்டு, தேவையான விடத்து உரிய சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கணக்காய்வாளர்கள்**

மீளாய்வாண்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வாளராகச் செயற்பட்டுள்ளார். நிதி அமைச்சின் பீஈடீ சுற்றறிக்கை 01 இற்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு திருவாளர்கள் இரணவீர நாகசிங்ஹ அன்ட் கம்பனி உதவியுள்ளனர். கணக்காய்வாளர்களாக அல்லாத வேறு எத்தகைய தொடர்போ அல்லது ஆர்வமோ தமக்கு இருக்கவில்லை என்பதை கணக்காய்வாளர் தலைமை அதிபதி உறுதிப்படுத்தி உள்ளார். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் ஒழுக்க நியதிகளுக்கு அமைவாக தாம் சுதந்திரமாகச் செயற்பட்டதாக உறுதிப்படுத்தியிருந்தனர்.

நிதியாண்டில் கணக்காய்வாளர்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 14 இல் தரப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் பீஈடீ சுற்றறிக்கை 01 இற்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உதவுவதற்காக திருவாளர்கள் ஏர்னஸ்ட் அன்ட் யங் கணக்காளர்கள் அடுத்துவரும் ஆண்டிற்காக நியமிக்கப்பட உள்ளனர். அவர்களை நியமிப்பதற்கும் அவர்களின் ஊதியத்தை நிர்ணயிப்பதற்கான பணிப்பாளர்களின் அதிகாரத்தை வழங்குவதற்குமான தீர்மானம் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் முன்மொழியப்படுவதற்கு உள்ளது.

**கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் சபையின் கட்டளைப்படி**

| ……………… | ……………… | ………………… |
|---|---|---|
| **பணிப்பாளர்** | **பணிப்பாளர்** | **எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்ரடேரியல் சேர்விசஸ் (பிறைவட்)லிமிடெட்** |

# நிதி சிறப்பம்சங்கள்

**உற்பத்திகள்**

| ஆண்டு | மெ/ட |
|---|---|
| 2008/9 | 877 |
| 2009/10 | 915 |
| 2010/11 | 771 |
| 2011/12 | 888 |
| 2012/13 | 1018 |
| 2013/14 | 848 |
| 2014/15 | 712 |
| 2015/16 | 771 |
| 2016/17 | 811 |




**விற்பனை**

| ஆண்டு | மெ/ட |
|---|---|
| 2008/9 | 497 |
| 2009/10 | 295.2 |
| 2010/11 | 760.3 |
| 2011/12 | 850.3 |
| 2012/13 | 537.8 |
| 2013/14 | 793 |
| 2014/15 | 708.5 |
| 2015/16 | 558.6 |
| 2016/17 | 530 |




**இறைவரி**

| ஆண்டு | ரூ.மில்லியன் |
|---|---|
| 2008/9 | 60.4 |
| 2009/10 | 21.1 |
| 2010/11 | 105 |
| 2011/12 | 128 |
| 2012/13 | 91.6 |
| 2013/14 | 143.6 |
| 2014/15 | 122.5 |
| 2015/16 | 109 |
| 2016/17 | 112.4 |




## மொத்த இலாபம்

| ஆண்டு | ரூ.மில்லியன் |
|---|---|
| 2008/9 | 44.8 |
| 2009/10 | 13.1 |
| 2010/11 | 62.4 |
| 2011/12 | 74.9 |
| 2012/13 | 53.5 |
| 2013/14 | 91.36 |
| 2014/15 | 56.35 |
| 2015/16 | 44.08 |
| 2016/17 | 45.47 |




**வரிக்கு முந்தைய நிகர இலாப**

| ஆண்டு | ரூ.மில்லியன் |
|---|---|
| 2008/9 | 37.3 |
| 2009/10 | 1.5 |
| 2010/11 | 37.7 |
| 2011/12 | 54.3 |
| 2012/13 | 16.4 |
| 2013/14 | 21.18 |
| 2014/15 | -10.84 |
| 2015/16 | 2.39 |
| 2016/17 | -2.52 |




**நிகர சொத்துக்கள்**

| ஆண்டு | ரூ.மில்லியன் |
|---|---|
| 2008/9 | 4.4 |
| 2009/10 | 137 |
| 2010/11 | 166 |
| 2011/12 | 214 |
| 2012/13 | 423.4 |
| 2013/14 | 367.5 |
| 2014/15 | 337 |
| 2015/16 | 336 |
| 2016/17 | 334 |



# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

## வருடாந்தக் கணக்குகள்
## 2016/2017

**2016 ஏப்ரல் 01 ஆம் திகதியில் இருந்து**
**2017 மார்ச் 31 ஆம் திகதி வரை**

**ஏர்ன்ஸ்ட் & யங்**
**பட்டயக் கணக்காய்வாளர்கள்**

# கஹடகஹகிறபைட் லங்கா லிமிடட்
# கணக்குகள் 2016/2017

**பொருளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| கூட்டு நிறுவனத் தகவல்கள் | 01 |
| கணக்காய்வாளர்களின் அறிக்கை | 02 - 03 |
| விரிவான வருமானக் கூற்று | 04 |
| நிதி நிலமைக் கூற்று | 05 |
| உரிமை மூலதன மாற்றக் கூற்று | 06 |
| காசுப் பாய்ச்சற் கூற்று | 07 |
| முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் | 08 - 14 |
| நிதி நிலை அறிக்கை வெளிப்படுத்தல்கள் | 15 |
| கணக்குக் குறிப்புகள் | 16 - 22 |
| வருமான வரிக் கணிப்பீடு | 23 - 24 |

# <u>கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்</u>

***2017 மார்ச் 31 இல் உள்ளவாறான கூட்டு நிறுவனத் தகவல்கள்***

**கம்பனியின் பெயர்**
கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

**சட்ட வடிவம்**
நிதி அமைச்சின் கீழ் உள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி

**பங்குரிமை மற்றும் உரிமை**
இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திறைசேரிச் செயலாளரால் 100மூ உரிமைகொள்ளப்பட்டுள்ளது.

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்**
இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, நாராஹென்பிட்டிய, கொழும்பு - 05

**சுரங்கம்**
கஹடகஹ சுரங்கம், மதுரகொட, தொடங்கஸ்லந்த

**தொடர்பு**

| **தலைமை** | | | **சுரங்கம்** | | |
|---|---|---|---|---|---|
| தொலைபேசி | : | 011- 2368738 | தொலைபேசி | : | 037-2252015 |
| தொலைநகல் | : | 011- 2058062 | தொலைநகல் | : | 037-4931711 |
| மின்னஞ்சல் | : | kgll@sltnet.lk | | | |
| இணையத்தளம் | : | www.kgrhite.lk | | | |

**நியதிச் சட்ட நிலை**
2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது.

**கம்பனியின் பதிவு இல.**
பீப்பீ 1513

**2017 மார்ச் 31 இல் உள்ளவாறான பணிப்பாளர்கள்**
அல்ஹாஜ் மீராஸாஹிபு அப்துல் மஜீட்
இஸ்மாயில் மொஹமட் ஜுனைஸ்
மொஹமட் சரீப் லியாகுவாத் அலிக்கான்
நைனாநாயக பதிரணஹேலாகே அனுஜா ரோஷனி ஜயவர்தன
பந்துல சேனாதி விமலசுந்தர
உதுமான்கந்து மொஹமட் நிஸார்
பாலசூரிய முதியன்சலாகே நந்த விபுல பண்டார பாலசூரிய

**செயலாளர்**
எக்கவுண்டிங் சிஸ்டம்ஸ் செகடேரியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிடட்
இல. 02, காசல் ஒழுங்கை, கொழும்பு 04

**கணக்காய்வாளர்கள்**

இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு
உதவும் வகையில்
**ஏர்ன்ஸ்ட் & யங்**
பட்டயக் கணக்காளர்கள்
**இல.201, டி செரம் பிலேஸ், கொழும்பு 10**

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி
கொள்ளுப்பிட்டி மற்றும் ரிதீகம

ரீசீஎம்/பீ/கேஜீஎல்எல்/16/17 2018.07.03

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் பங்காளர்களுக்கு

**கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்டின் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்டின் (“கம்பனி”) 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வு பொதுத் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் கணக்காய்வு செய்யப்பட்டது.

**நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று இடர் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த இடரை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**அபிப்பிராயம்**

எமது அபிப்பிராயத்தின் படி, கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் இன் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**ஏனைய நிதி மற்றும் பிரமாணத் தேவைப்பாட்டின்படியான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் இலக்க தேவைப்பாடுகளின் படி, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

அ. அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

ஆ. எனது அபிப்பிராயமானது

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதுமாகும்.

**பாராளுமன்றத்திற்கான அறிக்கை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கை காலப் போக்கில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**கஹடகஹ கிறபைட் லங்காலிமிடெட்**

**விரிவான வருமானக் கூற்று**

| **மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டு** | குறிப்பு | **2017** ரூபா | **2016** ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| கிறபைட் விற்பனை | 10 | 112,413,523.45 | 109,011,825.22 |
| நேரடிக் கிரயம், அகழ்வுக் கிரயம் | 11 | (66,934,529.41) | (66,156,139.20) |
| **மொத்த இலாபம்/(நட்டம்)** | | **45,478,994.04** | **42,855,686.02** |
| நானாவித வருமானம் | 12 | 2,459,435.10 | 890,704.12 |
| **கழி: செயற்பாட்டுக் கிரயம்** | | | |
| தனியாள் கிரயம் | 13 | (24,895,764.82) | (23,931,547.49) |
| தாபன மற்றும் நிர்வாகக் கிரயம் | 14 | (6,766,436.06) | (6,004,159.56) |
| பராமரிப்புக் கிரயம் | 15 | (440,845.78) | (293,196.28) |
| பயன்பாட்டுக் கிரயம் | 16 | (544,113.79) | (409,269.97) |
| பெறுமானத்தேய்வுக் கிரயம் | 17 | (6,482,396.87) | (6,870,398.57) |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம்/ நட்டம் மீதான இலாபம் | | (2,396,026.32) | (1,754,133.05) |
| விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - பணிக்கொடை | | (2,597,235.15) | (1,661,340.55) |
| நிர்வாகச் செலவு | | (44,122,818.79) | (40,924,045.47) |
| விற்பனை மற்றும் விநியோகக் கிரயம | 18 | (1,557,958.20) | (1,415,495.28) |
| ஏனைய செலவு | 19 | (376,453.80) | (762,314.98) |
| பெற்ற இலாபம்/செலவு | | 1,881,198.35 | 644,534.41 |
| சேதம் | | (4,403,238.91) | - |
| **வரிக்கு முன்னைய இலாபம்/ (நட்டம்)** | | **(2,522,040.56)** | **644,534.41** |
| வரி | | (2,116,282.71) | (1,129,939.81) |
| பிற்போடப்பட்ட வரிச் செலவினம் | | 3,219,378.32 | (833,519.13) |
| **வரிக்கு பின்னைய இலாபம்/ (நட்டம்)** | | **(1,418,944.95)** | **(1,318,924.53)** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| **ஏனைய விரிவான வருமானம் /** ஆண்டிற்கான செலவு | | | |
| **ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம** | | **(1,418,944.95)** | **(1,318,924.53)** |

**கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்**

**நிதி நிலைமைக் கூற்று**

| **மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டு** | குறிப்பு | **2017** ரூபா | **2016** ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதன, பொறி, உபகரணம் | 20 | 212,504,874.73 | 234,840,672.36 |
| செயற்பாடற்ற சொத்துக்கள் | 21 | 3,796,760.34 | 3,009,330.26 |
| தெங்குப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி | | 1,694,235.36 | 1,694,235.36 |
| பணிக்கொடை முதலீட்டு வருமானம் | | 2,932,674.31 | 2,000,000.00 |
| | | **220,928,544.74** | **241,544,237.98** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு | 22 | 125,652,065.79 | 100,299,108.05 |
| கடன்பட்டோர், வைப்புகள் மற்றும் பெறவேண்டியவைகள் | 23 | 15,871,697.21 | 18,595,391.01 |
| காசும் காசிற்குச் சமனானவைகளும் | 24 | 7,733,161.29 | 7,404,947.31 |
| | | **149,256,924.29** | **126,299,446.37** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **370,185,469.03** | **367,843,684.35** |
| **உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 25 | 13,000,000.00 | 13,000,000.00 |
| பகிரப்படாத இலாபம் | | 321,103,302.54 | 322,526,747.68 |
| | | **334,103,302.54** | **335,526,747.68** |
| **நீண்ட தவணைப் பொறுப்புகள்** | | | |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | 26 | 311,272.90 | 3,530,651.22 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 27 | 10,510,916.20 | 8,762,764.00 |
| | | **10,822,189.10** | **12,293,415.22** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் | 28 | 2,622,730.04 | 1,978,804.21 |
| வரிக்கான ஏற்பாடு | 29 | 7,029,236.06 | 6,412,953.35 |
| அட்டுறுக் கட்டணம் | 30 | 15,608,011.29 | 11,631,763.89 |
| | | **25,259,977.39** | **20,023,521.45** |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | **370,185,469.03** | **367,843,684.35** |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நான் உறுதிப்படுத்துகின்றேன்.

......................................
பிரதான நிதி உத்தியோகத்தர்

இந் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதுடன் சபையின் சார்பாகவும் சபைக்காகவும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

...............................                ...............................
தலைவர்                பணிப்பாளர்

## கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

### உரிமை மூலதன மாற்றக்கூற்று

| | **பங்கு மூலதனம்** | **மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்** | **திரண்ட இலாபம்/(நட்டம்)** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 2015 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 13,000,000.00 | 250,220,462.70 | 73,750.228.61 | 336,970,691.31 |
| வைத்திருப்பு வருவாய்க்கு மாற்றம் | - | (250,220,462.70) | 250,220,462.70 | - |
| முன்னைய ஆண்டு சீராக்கம் | - | - | (125,019.10) | (125,019.10) |
| ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | (1,318,924.53) | (1,318,924.53) |
| **2016 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | **13,000,000.00** | **-** | **322,526,747.68** | **322,526,747.68** |
| 2016 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 13,000,000.00 | - | 322,522,247.49 | 335,522,247.49 |
| ஆண்டிற்கான ஏனைய விரிவான வருமானம | | | - | - |
| ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | (1,418,944.95) | (1,418,944.95) |
| **2017 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | **13,000,000.00** | **-** | **321,103,302.54** | **334,103,302.54** |

# கஹடகஹ கிறபைட் லங்காலிமிடெட்

## காசுப்பாய்ச்சற் கூற்று

| மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2017 | 2016 |
|---|---|---|
| | இல. ரூபா | இல. ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | | |
| வருமான வரிச் செலவினங்களுக்கு முன்னரான தேறிய இலாபம்.'.(நட்டம்) | (2,522,041) | 644,534 |
| சீராக்கங்கள் : | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 2,597,235 | 1,661,341 |
| குத்தகை வட்டி | - | 39,696 |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் | (4,500) | 230,250 |
| உருவக நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு | 21,504,785 | 21,769,679 |
| பயன்படுத்தப்படாத சொத்துக்கள் மீதான சேதங்கள் | 4,403,239 | - |
| நாணயமாற்ற நட்டம் | (2,396,026) | (1,754,133) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **23,582,692** | **22,591,367** |
| இருப்புகள் (அதிகரிப்பு)/குறைவு | (25,039,215) | (15,960,308) |
| பெறவேண்டியவைகள் (அதிகரிப்பு)/குறைவு | 2,723,694 | (6,343,090) |
| கடன்கொடுத்தோரின் (குறைவு) /அதிகரிப்பு | 643,926 | 1,478,527 |
| அட்டுறு செலவினங்கள் (குறைவு) /அதிகரிப்பு | 3,976,247 | 1,725,929 |
| **செயற்பாடுகளில் இருந்து உருவான /(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | **5,887,344** | **3,492,424** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான /(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | | |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | (4,673,399) | (665,780) |
| பணிக்கொடை முதலீட்டு நிதியம் | (932,674) | 5,000,000 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான /(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | **(5,606,073)** | **4,334,220** |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான /(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள்** | | |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (1,500,000) | (3,006,310) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (849,083) | (148,288) |
| குத்தகைக் கொடுப்பனவு | - | (2,315,936) |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்தான /(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | **(2,349083)** | **(5,470,534)** |
| பணமாகவும் ரொக்கமாகவும் வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தின் விளைவுகள் | 2,396,026 | 1,754,133 |
| **காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | 328,214 | 4,110,243 |
| ஆண்டின் ஆரம்பத்தில்லான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் | 7,404,947 | 3,294,704 |
| **ஆண்டின் இறுதியிலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | **7,733,161** | **7,404,947** |
| **காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | | |
| இலங்கை வங்கி - ரிதீகம | 767,813 | 59,547 |
| இலங்கை வங்கி - கொள்ளுப்பிட்டி | 25,358 | 1,349,312 |
| டீஎப்சீ டொலர் க/கு இலங்கை வங்கி - கொள்ளுப்பிட்டி | 6,890,560 | 5,961,366 |
| சில்லறைக் காசு - தலைமை அலுவலகம் | 27,716 | 12,358 |
| சில்லறைக் காசு - சுரங்க அலுவலகம் | 21,714 | 22,365 |
| | **7,733,161** | **7,404,947** |

# கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

## 2017 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான குறிப்புகள்

## 1. கூட்டமைப்புத் தகவல்கள்

### 1.1 பொது

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் முன்னர் ''மக்கள்'' மயமாக்கப்பட்ட கம்பனியாகக் காணப்பட்டதுடன் 1996 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க பொது முயற்சிகள் அதிகாரச்சட்டத்தின் மீளமைக்கப்பட்டு அரசாங்கத்துடன் 1997 ஆம் ஆண்டில் மீள உரித்தளிக்கப்பட்டது. தற்போது முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமான வணிக நிறுவகமாகச் செயற்பட்டு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, நாராஹென்பிட்டிய,கொழும்பு – 05 இல் அமைந்துள்ளது.

### 1.2 முக்கிய நடவடிக்கைகளும் செயற்பாட்டின் தன்மையும்

காலப்பகுதியின் போது நிறுவகத்தினால் காரீய உற்பத்தியும் ஏற்றுமதியும் முக்கிய நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.3 பணிப்பாளர் பொறுப்புக் கூற்று

பணிப்பாளர் சபை நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு பொறுப்புடையதாகும்.

### 1.4 ஒப்பீட்டுத் தொகைகள்

முன்னைய ஆண்டிற்கான தொகைகளும் கூற்றுக்களும் நடைமுறை ஆண்டிற்கான வெளிப்படுத்தலுடன் இணங்கும் வகையில் மீள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

## 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

### 2.1 தயாரிப்பின் அடிப்படை

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் அன்றி வரலாற்றுக் கிரய அளப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்கள் குறிப்பிடப்ப ட்டிருந்தால் அன்றி இலங்கை ரூபாக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.2 இணக்கக் கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் விநியோகிக்கப்பட்ட எஸ்எல்எப்ஆர்எஸ் மற்றும் எல்கேஏஎஸ் அடங்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி, (இதன் பின்னர் எஸ்எம்ஈ இற்காக எஸ்எல்எப்ஆர்எஸ்) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந் நிதிக்கூற்றுக்கள் ஒரு ஆண்டிற்கான (2016) ஒப்பீட்டுத் தகவலை மாத்திரமே உள்ளடக்கியுள்ளன. நிறுவனம், பரிவர்த்தனையின் போது கிரயமாகக் கருதப்படும் நியாயப் பெறுமதியையும் கிரயமாகக் கருதப்படும் மீள்மதிப்பீட்டையும் கிரயமாகக் கருதுவது விலக்களிக்கப்பட்டமையால் நியாயப் பெறுமதியையும் மீள்மதிப்பீட்டையும் பிரயோகிப்பதற்கு தெரிவுசெய்திருக்கவில்லை.

கம்பனி 2016 ஏப்ரல் 01 ஆம் திகதியில் உள்ளவாறான அதன் ஆரம்ப நிதி நிலைமைக் கூற்றறைத் தயாரிக்கும் போது பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கையையே இக் கொள்கைகள் எப்போதும் அமுலில் இருந்தமையால் தொடர்ந்து சமர்ப்பித்த அனைத்துக் காலப்பகுதியின் போதும் பிரயோகித்துள்ளது.

### 2.3 முக்கியமான கணக்கீட்டு தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எதிர்வுகூறல்கள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு அறிக்கையிடப்பட்ட வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அதனுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகளின் வெளிப்படுத்தல்களிற்கு தாக்கம் செலுத்துபவை குறித்து முகாமைத்துவத்தின் முக்கிய தீர்வுகளையும் மதிப்பீடுகளையும் எதிர்கூறல்களையும் மேற்கொள்வதற்கு உதவுகின்றன. இவ் எதிர்வுகூறல்களினதும், மதிப்பீடுகளினதும் நிலையற்ற தன்மை எதிர்காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் கொண்டுசெல்லல் தொகைகளிற்கு ஓர் பொருண்மையான சீராக்கம் தேவைப்படும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவையாகும்.

**தீர்வுகள்**
கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் நடைமுறைப்படுத்துவம் செயற்பாட்டில் நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகள் மீது பாரிய தாக்கத்தைச் விளைவிக்கக்கூடியவற்றில்முகாமைத்துவம் பின்வரும் தீர்வுகளை எடுத்துள்ளது.

**அ. ஆதன வகைப்படுத்தல்**
ஓர் ஆதனம் முதலீட்டு ஆதனமாக அல்லது ஓர் உரிமையாளரால் ஆக்கிரமிக்கப்பட்ட ஆதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து கம்பனி தீர்மானிக்கின்றது. வழமையான வியாபார நடவடிக்கையில் விற்பனைக்காக அன்றி முதன்மையாக வாடகை வருமான உழைப்பிற்காகவும் மூலதன மதிப்பீட்டிற்காகவும் உள்ளவையாகும். நிறுவகம் கொண்டுள்ள ஏனைய சொத்துக்களிற்கு பாரியளவில் சுயாதீனமான முறையில் ஆதனம் காசுப்பாய்ச்சல்களை உருவாக்குகின்றதா என்பது குறித்து கருத்திற்கொண்டு ஓர் ஆதனம் முதலீட்டு ஆதனமாக தகமை பெறுகின்றதா என்பதை கம்பனி தீர்மானிக்கின்றது. ஆதனத்திற்கு மட்டுமன்றி உற்பத்தி அல்லது விநியோக நடைமுறையில் பயன்படுத்தப்படும் மற்றைய சொத்துக்களுக்கும் காசுப்பாய்ச்சலை ஏற்படுத்துவதற்குக் காரணமானஉரிமையாளரால் ஆக்கிரமிக்கப்பட்ட ஆதனம். சில ஆதனங்களின் ஓர் பகுதி வாடகை வருமானத்தை உழைப்பதற்காகஅல்லது மூலதன ஆக்கத்திற்காகவும் மற்றைய பகுதி நிர்வாக நோக்கங்களிற்காக அல்லது பண்டங்கள் அல்லது சேவைகளின் வழங்கலுக்காக அல்லது உற்பத்திக்காக வைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இப் பாகங்கள் வெவ்வேறாக விற்பனை செய்யப்பட முடியுமாயின் (வெவ்வேறாக நிதிக் குத்தகையின் கீழ் வெவ்வேறாக குத்தகைக்கிடப்பட முடியுமாயின்) அல்லது பாகங்களிற்காக தனியாக இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு இயலுமாயின் ஆகும். பாகங்கள் வெவ்வேறாக விற்பனை செய்யப்பட முடியாவிடின், குறிப்பிடத்தக்க வகையில் அல்லாத பாகம் நிர்வாக நோக்கங்களிற்காக அல்லது
பண்டங்கள் அல்லது சேவைகளின் வழங்கலில்அல்லது உற்பத்திப் பயன்பாட்டிற்காக வைத்துக்கொள்ளப்பட்டிருப்பின் மாத்திரமே ஓர் முதலீட்டு ஆதனமாகக் கணக்கீடு செய்யப்படுகின்றது. ஓர் ஆதனம் முதலீட்டு ஆதனமாக தகமை பெறாமைக்கு துணைச் சேவைகள் முக்கியம் பெறுகையில் இதனை நிர்ணயிப்பதற்காக தீர்வு பிரயோகிக்கப்படுகின்றது. கம்பனி அதன் தீர்வை முன்வைக்கையில் ஒவ்வொரு ஆதனம் குறித்தும் வெவ்வேறாக கருத்திற்கொள்கின்றது.

**ஆ. மதிப்பீடுகளும் ஊகங்களும்**
அடுத்துவரும் நிதியாண்டினுள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கொண்டு செல்லல் தொகையில் ஓர் முக்கிய சீராக்கத்தை விளைவிக்கும் ஓர் முக்கிய இடரைக் கொண்ட எதிர்காலம் குறித்த முக்கிய எதிர்வுகூறல்களும் அறிக்கைத்திகதியில் உறுதியற்ற மதிப்பீட்டுடனான ஏனைய முக்கிய விடயங்களும் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் கம்பனி தனது ஊகங்களையும் அளவீட்டு மதிப்பீடுகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. இருப்பினும், எதிர்கால அபிவிருத்திகள் குறித்த
தற்போதைய சூழல்களும் ஊகங்களும் கம்பனியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சந்தை மாற்றங்கள் அல்லது சூழல்களின் காரணமாக மாற்றமடையக் கூடும். அத்தகைய மாற்றங்கள் அவை ஏற்படுகையில் ஊகங்களில் பிரதிபலிக்கப்படுகின்றன.

**இ. வரிகள்**
இழப்புகள் பயன்படுத்தப்படக்கூடிய வகையில் வரிக்குட்பட்ட இலாபம் உள்ளவரையில் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளுக்காக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. எதிர்கால வரித் திட்டமிடல் உபாயங்களுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் நிலை மற்றும் வாய்ப்பு நேரத்தையும் அடிப்படையாகக் கொண்டு பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களின் தொகையை நிர்ணயிப்பதற்கு பாரிய முகாமைத்துவத் தீர்வு தேவைப்படுகின்றது.

**ஈ. ஊழியர் நலன்கள்**

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக்காக எஸ்எல்எப்ஆர்எஸ் 28 ஆல் பரிந்துரைக்கப்பட்டவாறு திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறைமைப் பயன்படுத்திய வரைவிலக்கணப்படுத்தப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட நலன்திட்டமான ஓய்வூதிய பணிக்கொடை நலன்களின் தற்போதைய பெறுமதியை கம்பனி அளவிடுகின்றது.

**உ. நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் காணப்பட்ட நிதிசாராச் சொத்துக்களிற்காக பெறுமதி இழப்பிற்கான அறிகுறிகள் ஏதேனும் உள்ளதா என்பது குறித்து கம்பனி மதிப்பீடு செய்கின்றது. கொண்டு செல்லப்பட்டுள்ள தொகைகள் அறவிடப்பட முடியாமைக்கான அறிகுறிகள் காணப்படுகையில் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி இழப்பிற்காக பரீட்சிக்கப்படுகின்றது.

**ஊ. வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் பெறுமதி இழப்பு**

வருமானக் கூற்றில் பெறுமதி இழப்புப் பதிவு செய்யப்பட வேண்டுமா என்பதை மதிப்பிடுவதற்காக ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் கம்பனி சகல பெறவேண்டியவைகளையும் மீளாய்வு செய்கின்றது. அத்தகைய படிப்பணத்தை மதிப்பீடு செய்வதற்காகஅதன் அறவீட்டின் நிலையற்ற தன்மையைச் சுட்டிக்காட்டும் முகாமைத்துவம் அறிந்த நிலுவைக் காலப்பகுதியையும் ஏனைய காரணிகளையும் கருத்திற்கொண்டு தீர்வைப் பிரயோகிக்கின்றது.

## 3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 3.1 வருமான ஏற்பிசைவு

கம்பனிக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவது பற்றி கருத்திற்கொள்ளப்படாதுபொருளாதார நலன்கள் உட்பாயும் சாத்தியம் உள்ள வரையிலும் வருமானம் நம்பகரமான முறையில் அளவிடப்படுகையில்வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. வரி அல்லது தீர்வை நீங்கலாக கொடுப்பனவின் ஒப்பந்த ரீதியாகக் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் கருத்திற்கொள்ளப்பட்டு பெறப்பட்டவையையும் பெறவேண்டியவையையும் கவனத்திற்கொண்டு வருமானம் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. வருமானத்திற்கு செலவின விடயங்களை சாட்டுதல் செய்கையில் அட்டுறு அடிப்படை பின்பற்றப்பட்டது.

**அ. ஏற்றுமதி வருமானம்**

அட்டுறு அடிப்படையில் தாக்கம் செலுத்தும் உண்மையான ஏற்றுமதிகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுமதி வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**ஆ. வட்டி வருமானம்**

பெறப்படும் வேளையில் வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படுகின்றது.

**இ. பெருந்தோட்டப் பயிர் வருமானம்**

காசு அடிப்படையில் பெருந்தோட்டப் பயிர் வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**ஈ. ஏனைய வருமானம்**

அட்டுறு அடிப்படையில் ஏனைய வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.2 செலவினம்

வியாபாரத்தின் போது மூலதனச் சொத்துக்களைப் பேணும் போது ஏற்கப்பட்ட அனைத்துச் செலவினங்களும் ஆண்டிற்கான இலாபம்/ (நட்டத்தை) அறவிடுவதற்கு அட்டுறு அடிப்படையில் வருமானத்தில் சாட்டப்பட்டுள்ளது.

### 3.3 வரி

**(அ) நடைமுறை வரிகள்**

நடைமுறை மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான நடைமுறை வருமான வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் அறவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அல்லது வரி அதிகாரிகளுக்குச் செலுத்தப்பட்ட தொகையில் அளவிடப்படுகின்றன. தொகைகளைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் வரி வீதங்களும் வரிச் சட்டங்களும் அறிக்கைத் திகதியில் அமுலில் உள்ள அல்லது தொடர்ந்து அமுலாக்கப்பட்டவையாகும்.

**(ஆ) பிற் போடப்பட்ட வரி**

நிதி அறிக்கையிடல் திகதியில், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மீதான வரி அடிப்படைகளுக்கும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவை கொண்டுசெல்லப்படும் தொகைகளுக்கும் இடையிலான தற்காலிக வேறுபாட்டின் மீது பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது. வரிக்கு உட்படும் சகல தற்காலிக வேறுபாடுகளுக்காகவும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. சகல கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்காகவும், பயன்படுத்தப்படாது முன்கொண்டு செல்லப்படும் வரிச் செலவுகள் மற்றும் ஏதேனும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளுக்குமாக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கிடைக்கப்பெற்ற வரிக்குட்பட்ட இலாபங்களிற்கு எதிராக கழிக்கப்படக் கூடிய தற்காலிக வேறுபாடுகளும், முன்கொண்டு செல்லப்பட்ட பயன்படுத்தப்படாத வரிச் செலவுகளும், பயன்படுத்தப்படாத வரி நட்டங்களும் பயன்படுத்தப்படக்கூடிய அளவிற்கு பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

